2012 மே 9]

இரண்டு சார்-பதிவாளர் அலுவலகங்களிலும் ஏற்கெனவே பதியப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவதுடன், அரசுக்கு வருகின்ற வருவாயும் குறைந்து, புதிதாக உருவாக்கப்படுகின்ற, மொடக்குறிச்சியிலே பதிகின்ற ஆவணங்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் குறைவாகத்தான் இருக்குமென்ற காரணத்தால், அங்கே புதிதாக சார்-பதிவாளர் அலுவலகம் திறப்பதற்கு தற்போது எந்தக் குறிப்பும் இல்லை என்பதுடன், தற்போது, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகமான சார்-பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மொடக்குறிச்சி தொகுதி, அவல்பூந்துறையிலே சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரத்தால் அதைத் திறந்து வைக்க வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

237—

நியாய விலைக் கடை

***8793—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, வடுகப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், டி. வளையசெட்டிபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் வடுகப்பட்டி—2 என்ற பகுதிநேர நியாய விலைக் கடையில் தற்போது 504 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, இந்தப் பகுதிநேர நியாய விலைக் கடையினை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற 8—5—2012 அன்று, அதாவது நேற்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இக்கடை விரைவில் முழுநேரக் கடையாகச் செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நியாய விலைக் கடையை, முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றிக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சங்ககிரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி நியாய விலைக் கடையைப் பிரித்து கிழக்கு ஓலப்பாளையத்திற்குத் தனியாக ஒரு கடை தொடங்க அனுமதி கொடுத்தும் இன்னும் நியாய விலைக் கடை தொடங்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிழக்கு ஓலப்பாளையத்தில் நியாய விலைக் கடையை விரைவில் தொடங்க ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய

2012 மே 9]

கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. விரைவில் அந்தக் கடை திறக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி ஒன்றியம், ஊத்துப்பாளையம் நியாய விலைக் கடையைப் பிரித்து, பூசாரிநாயக்கன்வளவுக்கு தனியாக ஒரு நியாய விலைக் கடையைத் தொடங்க பரிந்துரை செய்யப்பட்டும், அனுமதி அளிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதாகத் தெரிகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூசாரிநாயக்கன்வளவுக்கு தனியாக நியாய விலைக் கடை தொடங்க அனுமதியளிக்க ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாய விலைக் கடைகளையெல்லாம் சங்கங்கள்தான் நடத்துகின்றன. எனவே, இதற்கென்று விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே ஒரு பகுதிநேர நியாய விலைக் கடைக்கு 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; மலைப் பிரதேசமாக இருந்தால் 100 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; அந்தத் தாய்க் கடையிலிருந்து 1–1/2 கிலோ மீட்டர் இருக்க வேண்டும்; மலைப் பிரதேசமாக இருந்தால் 1 கிலோ மீட்டர் இருக்க வேண்டும் இதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். தாய்க் கடையிலிருந்து 150 குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பது விதி. இதே மலைப் பிரதேசமாக இருந்தால் 400 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். நகர்ப்புறமாக இருந்தால் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பது விதி. எனவே, இந்த விதிக்கு உட்பட்டு கடை இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.